**ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டம் - 2023 சனவரி 01 முதல் 2023 செப்தெம்பர் 30 வரையான**

---

ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2023 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஒக்தோபர் 23 ஆம் திகதிய 5678 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் சீ(3) ஆம் பந்தி, II ஆம் பிரிவு, 2 ஆம் பட்டியலுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளதுடன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு மூலம் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்திச் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கான சமமான அணுகுமுறையை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி சேவைகளை வழங்குவதை விரிவுபடுத்தி வலுப்படுத்துதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,250 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளினை 2016 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2022 திசெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 15 வரை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் அடைந்து கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகள் மற்றும் அதன் செயலாற்றல் 65 முதல் 88 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த பௌதீக செயலாற்றலின் சதவீதமாக அடைந்துகொள்ளப்பட்ட செயலாற்றல் அதிகமாக உள்ளது. | விரும்பிய இலக்குகள் அடைந்துகொள்ளப் பட வேண்டும். |

| | கூறு | இலக்கு | அடைந்து கொள்ளல் | அடைந்து கொள்ளல் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|
| (அ) | கல்விக் கட்டணம் பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை | 91,000 சிறுவர்கள் | 57,778 | 65 |
| (ஆ) | பாதுகாப்பற்ற/ குறைவான பாதுகாப்பு பகுதிகளில் ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி (ECD) நிலையங்களை நிறுவுதல் | 186 நிலையங்கள் | 155 | 85 |
| (இ) | ECD காலை உணவு நிகழ்ச்சித்திட்டம் | 155,000 சிறுவர்கள் | 109,597 | 71 |
| (ஈ) | வள நிலையங்களின் புனரமைப்பு அல்லது நிர்மாணம் | 9 நிலையங்கள் | 7 | 77 |
| (உ) | ECD நிலையங்கள் மூலம் வசதி மேம்பாட்டு மானியங்களைப் பெற்றுக்கொள்ளுதல் | 7,500 நிலையங்கள் | 6,637 | 88 |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 18 மில்லியன் தொகையான சொத்துக்கள் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் பெருந்தோட்ட மனித வள நம்பிக்கைப்பொறுப்பிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழின் பிரகாரம் அவற்றை தனித்தனியாக இனங்காண முடியவில்லை. | அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் தேவைக்கு ஏற்ப நிறுவனங்கள் மற்றும் துறைகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. | சொத்துக்கள் முறையாக மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டம் 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட்டதென நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் வங்கிக் கணக்கு மூலம் ரூபா 526,629 கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. | காலை உணவு வழங்குவதற்காக வழங்கப்பட்ட முற்பணத்தில் ரூபா 529,985 நிலுவை முற்பணம் இருந்தது. சில முன்பள்ளிகளின் முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்யும் போது மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத முன்பள்ளிகளின் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. செயற்திட்டம் கலைக்கப்பட்ட பின்னர், செயற்திட்ட வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படும் பணம் மீண்டும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | முற்பணங்கள் சரியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |